நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**Crl.M.P. No.3678/2024**

**2026 ம்** ஆண்டு பிப்ரவரி **மாதம் 07 -ம்** நாள் புகார்தாரர் தரப்பில் சாட்சி **பு.சா.1** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயகுமார் | வயது | 32 /2026 |
| தகப்பனார் பெயர் | பாலதண்டாயுதபாணி | ஜாதி | |
| தொழில் | மேனேஜர், ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட், | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | திருவாரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **07th day of February 2026.**

**முதல் விசாரணை** :

நான் இவ்வழக்கில் எனது நிறுவனத்திற்காக அதிகார முகவராக நியமிக்கப்பட்டுள்ளேன். அதற்கான ஆதாரம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கினை நடத்தவும், இவ்வழக்கிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் எனது பெயரில் முகவராக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. என்னை அதிகார முகவராக வைத்து எங்கள் நிறுவனம் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் இதற்கு முன்னர் அதிகார முகவராக இருந்த ஜெகதீஷ்வரன் என்பவரது கையொப்பம் ஆகும். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எதிரி மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அதிகார முகவராக எனக்கு கொடுத்த ஆவணம் STC 197/2024 என்ற வழக்கில் அசல் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அதன் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்காக மெமோ கொடுக்கப்பட்டுள்ளது. ஜெகதீஷ்வரன் என்பவருக்கு பதிலாக என்னை வழக்கை நடத்துவதற்காக அதிகாரம் வழங்கியுள்ளார்கள். தாவாவின் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| S.No. | Date of Document | Content | Exipits |
|---|---|---|---|
| 1. | 25.09.2019 | எதிரி மனுதாரர் நிதிநிறுவனத்தில் கடன் பெற்ற விபரம் - மாதாந்திர தவணை விபரம் - கணினி அசல் | Ex.P. 1 |
| 2. | 23.02.2023 | மனுதாரரின் நிதிநிறுவனத்திற்கு எதிரி கொடுத்த காசோலை - அசல் | Ex.P. 2 |
| 3. | 27.02.2023 | எதிரியின் வங்கியின் மெமோ - அசல் | Ex.P. 3 |

| | | | |
|---|---|---|---|
| 4. | 16.03.2023 | எதிரிக்கு மனுதாரரின் நிதிநிறுவனம் சார்பாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - நகல் | Ex.P. 4 |
| 5. | 24.03.2023 | எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அறிவிப்பு கடிதம் அஞ்சல் ஒப்புதல் அட்டை - அசல் | Ex.P. 5 |
| 6. | 07.03.2023 | மனுதாரருக்கு மனுதாரரின் நிதிநிறுவனம் கொடுத்த அதிகார ஆவணம் - நகல் | Ex.P6 |

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.

ஒம்/- G. லிசி.,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.